21st July 1964]

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இப்போதுள்ள நிலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் 200, 300 சதுரமைல் சுற்றளவுக்கு இருக்கின்ற இடங்களுக்கு எல்லாம் அடிக்கடி போகவேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால் அந்த இடங்களுக்கு உடனே சென்று கேஸ்கள் எடுப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே இவர்கள் உடனடியாகப் போவதற்கு வசதி செய்து கொடுக்கின்ற அளவில் இவர்களுக்கு ஜீப் கார்கள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கும் கேள்வியில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் கொடுக்க உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் இப்போது உடனடியாக இல்லை என்று சொன்னேன். பொதுவாக போலீஸ் அதிகாரிகளுக்கு சில குறிப்பிட்ட இடங்களுக்கு ஜீப் வசதிசெய்து கொடுப்பதற்கு ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது.

பாலம் கட்டுதல்

*603 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சை ஜில்லாவில் ஓடும் எந்தெந்த ஆறுகளுக்கு குறுக்கே பாலம் கட்ட திட்டம் போடப்பட்டது ?

(இ) எவ்வளவு செலவில் ?

(உ) 1963-ம் ஆண்டோடு கட்டி முடிந்த பாலங்கள் எத்தனை ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபாய் 145.16 லட்சம்.

(உ) ஒன்பது பாலங்கள்.

*604. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a river bridge across the Kushasthali river near Pallipet in Chingleput district; and

(*b*) if so, when this work will be taken up?

கனம் திரு. வெ. ராமையா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

---

[a] Printed as Appendix III on pages 535–538 infra.